## நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2021–ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் தேதி (30.07.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 05.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ் . பார்த்தசாரதி
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் .1.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 13 எண்ணிக்கை கொண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டிகளில் 29 ஆழ்துளை கிணறுகள் மூலம் சம்மெர்சிபில் மின் மோட்டார் பம்பு செட்டுக்ள் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு தினசரி காலை , மாலை இரண்டு வேலைகளிலும் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது . தற்சமயம் இந் நகராட்சியில் பொறியியல் பிரிவில் மேற்படி மோட்டார் பம்புகளை பராமரிக்க ஒரு மின் கம்பியாளர் மட்டுமே உள்ளார் . மேலும் மேற்படி மோட்டார் பம்புகள் பழுதடைந்தால் அதனை உடனடியாக பழுது பார்க்க போதிய பணி ஆட்கள் இல்லை. இதனால் தண்ணீர் சப்ளை மிகவும் பாதிப்பு அடைந்து , குடிநீர் பணி தடைபடும் நிலையில் உள்ளது . எனவே குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் நகரில் உள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் உள்ள சம்மெர்சிபில் மோட்டார் பம்புகள் மற்றும் மின் மோட்டார் பம்புகள் , உதிரிபாகங்கள் பழுதடைந்தால் அதனை உடனடியாக சரி செய்யவும் மற்றும் பழுதடைந்த மோட்டார் பம்புகள் காயில்கள் புதியதாக கட்டவதற்கும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.490000/–யை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:- 1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2230/2021/இ1)**
**தீர்மான எண் : 94 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .2.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 13 எண்ணிக்கை கொண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டிகளில் மூலம் நகரில் உள்ள பொது மக்களுக்கு தினசரி காலை , மாலை இரண்டு வேலைகளிலும் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது . தற்சமயம் இந் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் நீர்த் தேக்க தொட்டி காவலர்கள் 4 பேரும் மற்றும் பிட்டர் ஒருவர் மட்டுமே உள்ளனர் . . மேலும் குடிநீர் பராமரிப்பு பணிக்கு போதிய பணி ஆட்கள் இல்லை . மேலும் நகரில் 62 கீலோ மீட்டர் குடிநீர் பகீர்மான குழாய்கள் மூலம் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது . பொதுக்குழாய்கள் 152 எண்ணிக்கை உள்ளது . தற்சமயம் மெயின் குழாயில் உடைப்பு ஏற்பட்டலோ , பஸ்ட் ஏற்பட்டலோ , அடைப்பு ஏற்பட்டலோ மற்றும் குடிநீரில் கழிவு நிர் கலப்பதை உடனடியாக சரி செய்யவும் மேலும் 15 தினங்களுக்கு ஒரு முறை மேல் நிலை தண்ணீர் தொட்டிகளை சுத்தம் செய்ய வேண்டியுள்ளது . எனவே மேற்படி பணிகளை செய்வதற்கு குடிநீர் பிரிவில் போதிய பணி ஆட்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் விநியோகம் தடைபடும் நிலை ஏற்பட்டுள்ளது . எனவே குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் மேற்படி பணிகளை தனியார் மூலம் செய்து முடிக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.490000/– யை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:- 1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2231/2021/இ1)**
**தீர்மான எண் : 95 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .3.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் **.3** முள்ளிகிராம்பட்டு , வார்டு எண் **.14** திருக்கண்டேஸ்வரம் மற்றும் வார்டு எண் **.12** சோழவல்லி மேல் நிலை நிர்த்தேக்க தொட்டிகளில் உள்ள **80** MM சுவிஸ் வால்வுகள் **6** எண்ணிக்கை பழுதடைந்துள்ளதால் தண்ணீர் அதிகம் வீணாகின்றது . இதனால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் . இதனால் குடிநீர் தட்டுபாடு உள்ளது . எனவே குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் பழுதடைந்த **6** எண்ணிக்கை **80** MM சுவிஸ் வால்வை உடனடியாக மாற்றி பொருத்துவதற்கு **ரூ.33000/–** ஆகும் . இதனை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு:- 1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2229/2021/இ1)**

**தீர்மான எண் : 96 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .4.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண் **.3** முள்ளிகிராம்பட்டு மேல் நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு மோட்டார் பம்பு பழுதடைந்து இயங்கவில்லை . எனவே அப்பகுதியில் குடிநீர் விநியோகம் முற்றிலும் தடைபட்டுள்ளது . எனவே குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் உடனடியாக புதிய சம்மெர்சிபில் **10** HP x 400 LPM மோட்டார் பம்பு மற்றும் உதிரிபாகங்கள் வாங்கி பொருத்துவதற்கு **ரூ.50000/–** ஆகும் . இதனை நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு:- 1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2232/2021/இ1)**

**தீர்மான எண் : 97 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.5.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண் **.3** முள்ளிகிராம்பட்டு சாலையில் அம்மா உணவகம் அருகில் உள்ள ICDS குழந்தைகள் மையத்தின் முன்புறம் உள்ள நகராட்சி கழிவு நீர் கால்வாய் மேல்புறம் உள்ள சிமெண்ட் சிலாப் உடைந்து பழுதடைந்துள்ளது . இதனால் குழந்தைகள் மையத்திற்கு குழந்தைகள் செல்வதற்கு வழியில்லாமல் உள்ளது . எனவே குழந்தைகள் நலன் கருதி உடைந்த சிலாப்பை அகற்றி புதிய சிமெண்ட் சிலாப் அமைக்கவும் , இதே போல் பேருந்து நிலையத்தின் முன்புறம் உள்ள கழிவு நீர் கால்வாயில் மேல்புறம் உடைந்துள்ளது . இதனால் பொது மக்கள் கழிவு நீர் கால்வாயில் விழும் அபாயம் உள்ளது . எனவே மேற்படி கழிவு நீர் கால்வாயினை பொது மக்கள் நலன் கருதி உடைந்த பகுதியில் இரும்பு கம்பி மூலம் தடுப்பு அமைக்கவும் மற்றும் பேருந்து நிலையத்தின் உட்புறம் உள்ள கழிவறை நுழைவாயின் இரும்பு கதவு பழுதடைந்துள்ளது . மேற்படி கழிவறையின் இரும்பு கதவை பழுது பார்க்க வேண்டியுள்ளது . எனவே இந்த **3** பணிகளையும் செய்ய **ரூ.15000/–** ஆகும் . பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி . S .புவனேஸ்வரி அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக செய்யலாம் . இதனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு:- 1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற் கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2228/2021/இ1)**

**தீர்மான எண் : 98 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.6.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண் .3 முள்ளிகிராம்பட்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியை பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆய்வு செய்ததின் அடிப்படையில் மேற்படி பள்ளியை தரம் உயர்த்தி தர வேண்டுமென அப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள் . அப்பொழுது பள்ளியின் உட்புறம் உள்ள மண் தரையில் மழை காலங்களில் மழை நீர் தேங்கி நிற்பதால் சுகாதாரகேடு ஏற்படும் நிலை உள்ளதாகவும் , பள்ளியின் வகுப்பறையில் இரண்டு வகுப்புகள் ஒன்றாக நடப்பதால் பள்ளி மாணவர்களுக்கு ஒழுங்காக பாடம் நடத்த முடியவில்லை எனவும் , மேலும் மழை காலங்களில் மழை நீர் சாரல் வகுப்பறையின் உள்ளே அடிப்பதாக கூறினார்கள் . அச்சமயம் பள்ளியின் குறைபாடுகளை உடன் தீர்த்து வைக்குமாறு சட்ட் மன்ற உறுப்பினர் அவர்கள் கூறினார்கள் . எனவே பள்ளி மாணவ , மாணவிகளின் நலன் கருதி மேற்படி பள்ளி வளாகத்தில் மழைநீர் தேங்காமல் இருக்க பேவர் பிளாக் தரை அமைக்கவும் , மழைநீர் உள்ளே வகுப்பறையில் உள்ளே அடிக்காமல் இருக்க சிங்க சீட் அமைக்கவும் மற்றும் இரண்டு வகுப்புகளுக்கிடையே தடுப்பு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.780000/—யை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு:- 1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2227/2021/இ1)**

**தீர்மான எண் : 99 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.7.** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 3 முள்ளிகிராம்பட்டு , வார்டு எண் .14 திருக்கண்டேஸ்வரம் மற்றும் வார்டு எண் .12 சோழவல்லி மேல் நிலை நிர்த்தேக்க தொட்டிகளில் உள்ள மூன்று இடங்களிலும் 80 MM சுவிஸ் வால்வுகள் 6 எண்ணிக்கை பழுதடைந்துள்ளதை புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு 22.07.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | சுவிஸ் வால்வு ஒரு எண்ணிக்கை தொகை ரூ. |
|---|---|
| Devi Baladurgaa Castings<br>5. Singanna Naicken street<br>Chennai. | **4991/—** |
| Devi Industries<br>5 . Singanna Naicken Street<br>Post Box No .8312<br>Chennai - 1 | **5228/—** |
| JB Industries<br>1/25 . Chakkari Chetty Street<br>Kondithope . Chennai - 79 | **5293/—** |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** . 1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Devi Baladurgaa Castings 5. Singanna Naicken street Chennai. அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 2200 /2021/இ1)**
**தீர்மான எண் : 100 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.8.** நெல்லிக்குப்பம் நகராட்சி அவசர அவசியம் கருதி நகராட்சி அம்மா உணவகத்தில் மாவு அரைக்கும் எந்திரம் மற்றும் குளிர் சாதன பெட்டி பழுதடைந்ததை பழுது பார்த்து மீண்டும் பொருத்தும் பணிக்கு தோராய செலவினம் ரூ. 23000/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு:- 1.</u> மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 1855/2021/இ1)**
**தீர்மான எண் : 101 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.9.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சி அம்மா உணவகத்தில் மாவு அரைக்கும் எந்திரம் மற்றும் குளிர் சாதன பெட்டி பழுதடைந்ததை பழுது பார்த்து மீண்டும் பொருத்தும் பணிக்கு 07.07.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | தொகை ரூ. |
|---|---|
| திருமதி.S .புவனேஸ்வரி<br>3 , பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம் .<br>நெல்லிக்குப்பம் | 22100/— |
| இனோக் எலக்ட்ரிக்கல்ஸ்<br>105 B , மெயின் ரோடு<br>நெல்லிக்குப்பம் | 24000/— |
| திருமதி. எஸ்.வீரமோகன்<br>72, PAH ரோடு<br>நெல்லிக்குப்பம் | 23500/— |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> . 1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. எஸ். புவனேஸ்வரி , 3 , பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம் , நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 1606 /2021/இ1)**
**தீர்மான எண் : 102 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.10.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் ஒப்பந்ததாரரிடம் பணிபுரியும் தொழிலாளர்களின் வைப்பு நிதி தொகை செலுத்த கோரி ஆணையர், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், திருச்சி, அவர்கள் மூலம் கடிதம் பெறப்பட்டு, அத்தொகையினை செலுத்தாமல் இருக்க திரு.கே.கே.ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் மூலம் சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. அதன் படி வழக்கு தொடரப்பட்டதற்கும், வழக்கு செலவீனத்திற்கும் மன்றத்தீர்மானம் (எண்.546, நாள்.30/06/2015) பெற்று தொகை ரூ.28,000/— திரு.K.K.ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து திருச்சி தொழிலாளர்களின் வைப்பு நிதி அலுவலகம் மூலம் தொகை செலுத்த கடிதங்கள் பெறப்பட்டது. தொழிலாளர் வைப்பு நிதி தொகை செலுத்த தடை

விதிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கில் தொகை செலுத்தாமல் இருக்க இடைகால தடை பெறப்பட்டது அதன் பின்னர் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் தொழிலாளர் வைப்பு நிதி தொடர்பான ஆவணங்கள் மற்றும் கோப்பு நகல்கள் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், திருச்சியில் இவ்வலுவலக இளநிலை உதவியாளர்கள் மூலம் நேரில் சென்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது W.P.No.26159 of 2015 நாள். **12.02.2021, 07.06.2021** ன் படி கூடுதல் அபிடாவிட் தாக்கல் செய்ய திரு.K.K.ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, ரூ.**7500/–** தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றத்தின் அனுமதிக்கலாம்

<u>ந.க.எண்.3508/2013/பி2</u>

**தீர்மான எண் : 103 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.11.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். **85** நாள். **30.06.2021** ன்படி 27.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகத்திற்கு Liquid Chlorine தருவித்து வழங்குதல் பணி . | 3.50 | Sai Tirupathi Trading Enterprises , புதுச்சேரி | **0.36%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | D.R . Scientific and Surgical , Puducherry. | **1.79%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.36%** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sai Tirupathi Trading Enterprises , புதுச்சேரி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 2067/2021/இ1)**

**தீர்மான எண் : 104 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.12.** நெல்லிக்குப்பம் நகராட்சி அவசர அவசியம் கருதி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனா வைரஸ் தொற்று ஏற்பட்ட பகுதிகளில் பாதிப்பு அடைந்த தெருக்களில் வெளி ஆட்கள் மற்றும் வாகனம் உள்ளே வராத வண்ணம் நகராட்சி அலுவலகத்தில் மூலம் கொடுக்கப்படும் இரும்பு Sheet . சவுக்ககழி மற்றும் கயிறு மூலம் 4 இடங்களில் தடுப்பு வேலி அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.11500/–ஐ நகராட்சி Covid – 19 நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

<u>ந.க.எண்.1606/2021/இ1</u>

**தீர்மான எண் : 105 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.13.** நெல்லிக்குப்பம் நகராட்சி Covid – 19 நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனா வைரஸ் தொற்று ஏற்பட்ட பகுதிகளில் பாதிப்பு அடைந்த தெருக்களில் வெளி ஆட்கள் மற்றும் வாகனம் உள்ளே வராத வண்ணம் நகராட்சி அலுவலகத்தில் மூலம் கொடுக்கப்படும் இரும்பு Sheet . சவுக்ககழி மற்றும் கயிறு மூலம் தடுப்பு வேலி அமைக்கும் பணிக்கு **10.06.2021** அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | தொகை ரூ. |
|---|---|
| M/s.அருணாச்சல அசோசியேட்<br>398,மெயின் ரோடு<br>நெல்லிக்குப்பம் | **3000/–** |
| திரு.N.சந்திரசேகர்<br>**82** , அண்ணா நகர்<br>நெல்லிக்குப்பம் | **2900/–** |
| திருமதி. எஸ்.பரிமளா<br>**19**, மோரை எவரெட்புரம் **.**<br>நெல்லிக்குப்பம் | **2800/–** |

**<u>அலுவலகக்குறிப்பு:</u> . 1.** வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. எஸ்.பரிமளா, **19**, மோரை எவரெட்புரம் **.** நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் **.**

**(ந.க.எண். 1606 /2021/இ1)**

**தீர்மான எண் : 106 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.14.** நகராட்சி பொது சுகாதாரம் **–** திடக்கழிவு மேலண்மை திட்டத்தின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை பிரித்து வாங்கப் பெற்று தள்ளு வண்டிகள் மற்றும் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களில் தனித்தனியே சேகரித்து எடுத்து செல்ல தேவையான பிளாஸ்டிக் நீலம் மற்றும் பச்சை வண்ண குப்பைத்தொட்டிகள் **50** லிட்டர் அளவு கொண்டவை – **120** எண்ணிக்கையும், **80** லிட்டர் அளவு கொண்டவை – **80** எண்ணிக்கையும் ஒப்பந்தப்புள்ளி பெற்று வாங்கிட அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**2.00** இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு) 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்டநிதி / நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண் 1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 107 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.15.** தமிழக அரசின் தலைமை செயலாளர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் அனுப்பியுள்ள நேர்முக கடிதம் எண் **27887**/பி1/**2021–1** நாள் **28.07.2021**ல் மாவட்டந்தோறும் கொரோனா தொற்று பரவாமல் தடுத்திடும் விதமாக பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுகின்ற வகையில் **01.08.2021** முதல் **07.08.2021** முடிய ஏழு நாட்களுக்கு வெவ்வேறு நிகழ்ச்சிகள் மூலம் கொரோனா தொற்று பிரச்சாரங்கள் மேற்கொள்ள அறியுறுத்தியதின் பேரில் நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் சார்பாக தினமும் ஒன்று அல்லது இரண்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதன் வாயிலாக பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதினால் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கு உரிய பொருட்கள், பேனர்கள், துண்டு பிரசுரங்கள், பரிசு பொருட்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கி வழங்கிட அனுமதியும், நிகழ்ச்சியில்

பங்கு பொறுவோர் அனைவருக்கும் ஸ்நாக்ஸ் வாங்கி வழங்கிட அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/—க்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

(அ.கு.) 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இச்செலவினம் ரூ.50,000/— தினை கொரோனா தொற்று தடுப்பு நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 108 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.16.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொதுசுகாதாரம் கொரோனா தொற்று நகர் பகுதியில் தடுத்திடும் பொருட்டு அனைத்து பகுதிகளில் வசிக்கக்கூடிய பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கிட ஏதுவாக கபசுர குடிநீர் பவுடரை காய்ச்சிவதற்கு மர விறகுகளும், பொதுமக்களுக்கு வழங்கிடுவதற்கு "பேப்பர் கப் கள்" உள்ளூர் சந்தையில் வாங்கிடுவதற்கு அனுமதியும், அதற்கான செலவினத்திற்கும், கொரானா தடுப்பூசி முகாம்கள் பிரதான இடங்களில் நடத்திடும் சமயத்தில் முகாமில் பங்கேற்கும் மருத்துவ அலுவலர், மருத்துவ பணியாளர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு குடிநீர் பாட்டில், ஸ்நாக்ஸ், தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கிடுவதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கபசுர குடிநீர் காய்ச்சிடவும், வழங்கிடவும் மற்றும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் தோராய செலவினம் ரூ.50,000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(அ.கு.)—1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தினை கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கிட அனுமதிக்கலாம்.

3. பொதுசுகாதாரம் மற்றும் நோய் தொற்றின் அவசர அவசியத்தினை தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும், செலவு செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 109 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.17 .** நெல்லிக்குப்பம் நகராட்சி சட்ட சபை தேர்தல் 2021 கடலூர் மாவட்டம் 154 பண்ருட்டி சட்டமன்ற தொகுதி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி மேற்கு துவக்கபள்ளி வளாகத்தில் உள்ள தெற்கு பார்த்த கட்டிடத்தில் உள்ள கிழக்கு பகுதி வகுப்பறையை புதியதாக ஒரு வாக்கு சாவடி மையமாக மாற்ற கட்டிடத்திற்கு வர்ணம் பூசுதல் மற்றும் புணரமைப்பு பணிகள் அமைக்கும் பணிக்கு கல்வி நிதியில்7நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ.62000/— ஒப்பந்ததாரர் திரு . N.சந்திரசேகர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு: மன்றத்தின் அனுமதிக்கலாம்

**<u>ந.க.எண்.1471/2021/இ1</u>**

**தீர்மான எண் : 110 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.18 .** நெல்லிக்குப்பம் நகராட்சி சட்ட சபை தேர்தல் 2021 கடலூர் மாவட்டம் 154 பண்ருட்டி சட்டமன்ற தொகுதி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி மேற்கு துவக்கபள்ளி வளாகத்தில் உள்ள தெற்கு பார்த்த கட்டிடத்தில் உள்ள மேற்கு பகுதி வகுப்பறையை புதியதாக ஒரு வாக்கு சாவடி மையமாக மாற்ற கட்டிடத்திற்கு வர்ணம் பூசுதல் மற்றும் புணரமைப்பு பணிகள் அமைக்கும் பணிக்கு கல்வி நிதியில்7நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ.38000/— ஒப்பந்ததாரர் திரு . N.சந்திரசேகர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு: மன்றத்தின் அனுமதிக்கலாம்

**<u>ந.க.எண்.1471/2021/இ1</u>**

**தீர்மான எண் : 111 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.19.** இந்நகராட்சி பொது சுகாதாரம் – தற்சமயம் வடக்கிழக்கு பருவமழை துவங்க இருப்பதினால், நகர் பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்கா வண்ணம், மழைநீர் சரிவர செல்ல வேண்டி வார்டு பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்களில் வளர்ந்து இருக்கும் செடி, கொடிகள் அகற்றி தூர் வாரிடும் பணியினை மேற்கொள்ள JCB வாகனம் நகராட்சியில் இல்லாத காரணத்தினால், வாடகை அடிப்படையில் எடுத்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதேபோன்று மழை பொழியும் சமயத்தில் பொதுமக்கள் எவரேனும் மழைநீர் தேக்கம் உள்ளதாக புகார் தெரிவிக்கும் சமயத்தில் JCB வாகனம் எடுத்து சென்று மழைநீர் செல்ல வழிவகை செய்திடும் பணிக்கும் JCB வாடகை எடுத்து பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2210/2021/எச்1**

**தீர்மான எண் : 112 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.20.** தற்சமயம் தமிழகத்தில் வடக்கிழக்கு பருவமழை துவங்க உள்ளதினால், மழை பெய்யும் சமயத்தில் நகர் பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் எதுவும் தேக்கமின்றி முழுமையாக செல்லும் வகையில் மழைநீர் செல்லக்கூடிய கோட்டம் – 2ல் உள்ள பிரதான கால்வாய்களில் உள்ள செடி, கொடிகள் அகற்றி தூர் வாரும் பணி மேற்கொள்ள செயின் டோசர் தேவைப்படுவதினால், ஒப்பந்ததாரர்கள் மூலம் வாடகை அடிப்படையில் தூர் வாரும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், கோட்டம் – 2ல் உள்ள

1. வெள்ளப்பாக்கத்தான் துணை வாய்கால்
2. ஆரோக்கியசாமி தெரு பின்புறம்
3. அண்ணாநகர் பெரியார் கால்வாய்

ஆகிய பிரதான கால்வாய்கள் செயின் டோசர் மூலம் தூர் வாரிடும் பணிக்கு செயின் டோசர் வாடகை அடிப்படையில் எடுக்கப்படும் வாகனத்திற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.2.50 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2208/2021/எச்1**

**தீர்மான எண் : 113 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.21.** வடக்கிழக்கு பருவமழை துவங்க உள்ளதினால், நகர் பகுதியில் உள்ள குடியிருப்புபகுதியில் மழைநீர் தேக்கமின்றி செல்லுகின்ற விதமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் செல்லும் பிரதான கால்வாய்கள் செயின் டோசர் மூலம் சுத்தம் செய்து, தூர்வாரி தயார் நிலையில் வைத்திடும்போது மழைநீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவாக இருக்கும். எனவே கோட்டம் – 1ல் உள்ள

1. நெல்லிக்குப்பத்தான் வாய்கால்
2. திருவள்ளுவர் நகர் நீண்ட கால்வாய்
3. சார் பதிவாளர் அலுவலகம் – காரமணிக்குப்பம் ரயில்வே பாதை நகராட்சி எல்லை முடியும் வரை உள்ள கால்வாய்

ஆகிய பிரதான கால்வாய்கள் செயின் டோசர் மூலம் சுத்தம் செய்து தூர் வாரும் பணி மேற்க்கொள்ள செயின் டோசர் வாடகை அடிப்படையில் எடுத்திடுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2209/2021/எச்1**

**தீர்மான எண் : 114 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.22.** நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பணிக்காக நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், DBC பணியாளர்கள், நகராட்சி மருத்துவமனை பணியாளர்கள், அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள்

அனைவருக்கும் தினந்தோறும் ஒருமுறை பயன்படுத்தக் கூடிய முக கவசம் (One time use face mask) வழங்க வேண்டியுள்ளதினால், நகராட்சியில் இருப்பு குறைவாக உள்ளதினால் ஒரு மாதத்திற்கு தேவையான 5000 எண்ணிக்கை முக கவசங்கள், ராயல் பேப்பர் மார்ட், செம்மண்டலம், கடலூர் என்கின்ற முகவரியில் ஒன்றின் விலை ரூ.4.00/– என்கின்ற வாங்கிடவும், அதற்கான செலவினம் ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு) 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியத்தினை கருதி "கடலூர் ராயல் பேப்பர் மார்ட்" ல் வாங்கி பயன்படுத்திட அனுமதி வழங்கலாம்.

3. இச்செலவினத்தினை கொரோனா தொற்று தடுப்பு நிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 115 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.23.** இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர் திரு.டி.சேகர் மற்றும் 4 தூய்மை பணியாளர்கள் தங்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கக் கோரி தொடர்ந்த வழக்கு W.P.No,18914/2019 ல் சென்னை உயர்நீதி மன்றம் 28.02.2021 ம் தேதியில் மேற்படி வழக்கின் தீர்ப்புரை வழங்கியுள்ளது. மேற்படி, தீர்ப்பின் மீது சட்ட கருத்துரை வழங்க கோரி 19.07.2021அன்று கடிதம் வழக்கறிஞர் திரு.வி.ஜெய்பிரகாஷ்நாராயணன் அவர்களுக்கு நேரில் சென்று வழங்கப்பட்டது. மேற்படி, வழக்கறிஞர் 23.07.2021அன்று சட்ட கருத்துரை வழங்கியுள்ளார். சட்ட கருத்துரை வழங்கியதற்கான பட்டியல் தொகை ரூ.5,000/– வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை வழங்க மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.3278/2011/எப்1**

**தீர்மான எண் : 116 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.24 .** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்கள் தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் காலை , மாலை இரண்டு வேலைகள் நகரில் பல்வேறு பகுதிகளில் உள்ள 13 மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் மற்றும் மேல்நிலை தொட்டி வளாகத்திலிலுள்ள 29 ஆழ்துளை கிணறுகள் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு தினசரி சப்ளை செய்யப்படுகிறது . தற்சமயம் குடிநீர் பிரிவில் மேல்நிலை தண்ணீர் தொட்டி காவலர்கள் 4 நபர்கள் மட்டுமே உள்ளனர் .இவர்களை வைத்துக்கொண்டு அனைத்து மேல்நிலை தண்ணீர் தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறுகளை பராமரிக்க இயலாமல் உள்ளது . மேலும் மின் தடை காலங்களிலும் மின்சாரம் மின்சாரம் உயர் மற்றும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மின் மாற்றம் ஏற்படும் பொழுது மின் மோட்டார் பம்புகளை இயக்குவது மிக சிரமமாக உள்ளது . இதனால் தினசரி குடிநீர் விநியோகம் தடைபடும் நிலை உள்ளது. எனவே குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் தினசரி குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்கவும் ஆகஸ்ட் மாதம் 2021 ஒரு மாதத்திற்கு 3 நபர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தர விலை பட்டியல் படி ஒரு நாளைக்கு ரூ.360/. வீதம் பணி விலை அடிப்படையில் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு:- 1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

2. தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2463/2021/இ1)**

**தீர்மான எண் : 117 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.25 .** நகராட்சி பகுதியில் தனிநபர் கழிவறை கட்ட இடம் வசதி இல்லாத குடியிருப்புகளில் வசிக்கும் பொது மக்களுக்காக 21 சமுதாய கழிவறைகளை பராமரிப்பு மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெற்று திருமதி.எஸ்.புவனேஸ்வரி ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களுக்கு 01.12.2020ந் தேதி முதல் 30.11.2021 தேதிய முடிய ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு செய்வதற்கான பணி உத்திரவு வழங்கப்பட்டு அவர்களது

பராமரிப்பில் சமுதாய கழிவறைகளை பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் நெல்லிக்குப்பம் நகராட்சி திறந்தவெளி கழிப்பிட மற்ற நகராட்சி (ODF+) என அறிவிப்பு செய்திட தூய்மை இந்தியா திட்டம் சார்பாக வருகை தந்த QCI (Quality Control of India) நிறுவனத்தினர் சமுதாய கழிவறைகள் சரிவர பராமரிப்பு இல்லை என்பதினை சுட்டிகாட்டி ODF+ சான்று வழங்க மறுத்துவிட்டனர். எனவே, நகராட்சி தூய்மை பணியாளர்கள் மூலம் தூய்மை செய்து மீண்டும் பார்வையிட கோரியதன் காரணமாக பார்வையிட வருகை தந்த QCI (Quality Control of India) நிறுவனத்தினர் கழிவறைகளை பார்வையிட்ட பின்னர் தற்சமயம் திருப்திகரமாக இல்லை என தெரிவித்ததின்பேரில் நகராட்சி துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் மூலம் அவர்கள் தெரிவித்த குறைகளை நிவர்த்தி செய்து, தூய்மை செய்து ODF+ சான்று பெறுவதற்கு உரிய சாதகமான நிலையினை ஏற்படுத்தப்பட்டது. நகராட்சியில் போதிய தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் மூலம் சமுதாய கழிவறைகளை பராமரிப்பு செய்திட ஒப்பந்ததாரர் நியமித்து பணி உத்திரவு வழங்கப்பட்டது.

ஆனால், ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட்ட 21 சமுதாய கழிவறைகளில் தற்சமயம் 16 கழிவறைகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. மேலும், சில கழிவறைகள் அடிக்கடி மூடப்படுவதாக பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் புகார்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, முறையாக பராமரிப்பு செய்ய தவறிய ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.புவனேஸ்வரி, அவர்களுக்கு வழங்கப்பட்ட 21 சமுதாய கழிவறைகளை பராமரிப்பு செய்வதற்கான உத்திரவினை ரத்து செய்து புதிய ஒப்பந்தப்புள்ளி பெற்று புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்திடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.15,00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(அ.கு.)–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரர் / நிறுவனத்திற்கு ஓராண்டு பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம்.
3. இச்செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி / தூய்மை இந்தியா திட்ட நியிதியிலிருந்து செலவு மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 118 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.26 .** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் தினசரி பராமரிப்பு பணிக்கு அனுப்ப தேவையான 3 (மூன்று) ஆட்களை சப்ளை செய்யும் பணிக்கு 21.06.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | குடிநீர் தினசரி பராமரிப்பு பணிக்கு ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு கூலி தொகை ரூ. |
|---|---|
| M/s.அருணாச்சல அசோசியேட்<br>398,மெயின் ரோடு<br>நெல்லிக்குப்பம் | 400/– |
| திருமதி.S .பரிமளா<br>க/பெ. சுவாமிநாதன்<br>19, மோரை எவரெட்புரம் . நெல்லிக்குப்பம் | 380/– |
| திருமதி.S .புவனேஸ்வரி<br>3 , பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம் .<br>நெல்லிக்குப்பம் | 360/– |

<u>அலுவலகக்குறிப்பு:</u> .1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.S. புவனேஸ்வரி , 3 , பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம் . நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2068/2021/இ1)**

**தீர்மான எண் : 119 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.27 .** இந்நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, நகரில் அமைந்துள்ள அனைத்து குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்கள் தோறும் திடக்கழிவுகளை தரம் பிரித்து பெறப்படுவதற்கு முதல் நிலை சேகரிப்பிற்காக 13 எண்ணிக்கை BOV (Battery Operator Vehicle) வாகனங்கள் 10.04.2019 தேதியில் வாங்கப்பெற்றதில் மூன்று வாகனங்கள் முன் சக்கரம் இணைப்பில் உடைந்துவிட்டபடியால் மீதமுள்ள 10 வாகனங்களிலுள்ள பேட்டரிகளின் சார்ஜ் முழுமையாக நிற்காமல் அடிக்கடி இறங்கி விடுவதினால், பணி செய்ய முடியால் பாதியிலேயே நிறுத்திடும் சூழ்நிலை உள்ளது. இதனால், திடக்கழிவுகள் மிகவும் பாதிக்கப்பட்டு புகார்கள் வருகின்றது. எனவே, நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு தற்சமயம் நான்கு வாகனங்களுக்கு மட்டும் லித்தியம் பேட்டரி (60V;40AH) பேட்டரி வாங்கி பொருத்த அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2254/2021/எச்1**

**தீர்மான எண் : 120 அனுமதிக்கப்பட்டது .**

மன்றபொருள்.28 . இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு குப்பை சேகரிக்கப் பயன்படுத்தப்படும் டாடா ஏஸ் வாகனம் TN31 AH 6556ல் செல்ப் மோட்டார் பழுது அடைந்து விட்டபடியால், பணிக்கு பயன்படுத்த முடியாத நிலையில் வாகனம் பழுதடைந்து உள்ளது. அதனை சரி செய்து வாகனத்தினை பயன்படுத்த அவசர அவசியத்தினை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவு மேற்கொண்டு பணியினை உடன் செய்து முடிக்க, அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,500/—க்கு மன்றத்தின் பொருள் வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1906/2021/எச்1**

**தீர்மான எண் : 121 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.29** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வரும் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக அதிகமான சேதங்கள் ஏற்படும் என்றும் தாழ்வான பகுதிகளில் மிக அதிகமான மழைநீர் தேங்கும் என்றும் , அதிக புயல் காரணமாக மரம் மற்றும் பழைய கட்டிடங்கள் அதிகபடியான சேதங்கள் ஏற்படும் என்றும் அதற்கு ஏற்றாற் போல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக மழை , வெள்ளநீர் தாழ்வான பகுதிகளில் தேங்காத வண்ணம் இருக்குமாறும் , பொது மக்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்குமாறும் அதற்கு ஏற்ப தனியார் மண் அள்ளும் இயந்திரங்களை (JCP) வாடகைக்கு எடுத்தக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் புயல் முன்னெச்சரிக்கை ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்கள் . மேலும் இந்நகராட்சி பகுதிகளில் 22 தாழ்வான குடிசைப்பகுதிகள் உள்ளது . மேற்படி பகுதிகள் அனைத்தும் முன்னெச்சரிக்கை பகுதிகளாக அரசால் அறிவிக்கப்பட்ட பகுதியாகும் . எனவே பொது மக்கள் நலன் கருதியும் , புயல் மற்றும் வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையிலும் நகரில் உள்ள 30 வார்டுகளிலும் எந்த பாதிப்பும் ஏற்படாமல் தடுக்கும் வகையில் தனியார் மண் அள்ளும் இயந்திரங்கள் (JCP) 4 வாடகைக்கு எடுத்து நகராட்சி ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான செலவினத்தை ரூ.210800/.ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொண்டதிற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-** மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண் . 2029/2020/இ1)**

**தீர்மான எண் : 122 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.30** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தின் அருகில் உள்ள சுகாதார பணியாளர்கள் குடியிருப்பு வளாகத்திற்கு குடிநீர் வசதிக்காக புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு அதில் புதியதாக ஆழ் குழாய் கிணறு மோட்டார் பம்பு அமைக்கப்பட்டு சுகாதார பணியாளர் குடியிருப்பிற்கு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது . மேற்படி ஆழ்குழாய் கிணற்றில் இருந்து கூடுதல் குடிநீரை அருகில் உள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டியில் ஏற்றபட வேண்டியுள்ளது . இதற்கு புதிய ஆழ்குழாய் கிணற்றில் இருந்து புதியதாக மெயின் குழாய் இணைப்பு செய்ய வேண்டியுள்ளது . இதனை பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் ரூ.20000/–க்கு நகராட்சி ஒப்பந்ததாரர் திரு . N . சந்திரசேகர் அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 2553/2021/இ1)

**தீர்மான எண் : 123 அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி